


**06.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி, மாநிலங்களவையில் இன்று பதிலளிக்கிறார்.

2. அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரம் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் S.ஜெய்சங்கர் இன்று பிற்பகல் மாநிலங்களையில் அறிக்கை வெளியிடுகிறார்.

3. டிஜிட்டல் பண பரிவர்த்தனை முறைகேடுகளை கையாளும் நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

4. நெல்லை மாவட்டம் கங்கைகொண்டானில் நான்காயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான சூரிய மின்சக்தி தகடு உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

5. நாக்பூரில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்த் முதலில் பேட் செய்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி மாநிலங்களவையில் இன்றுமாலை பதிலளிக்கிறார்.

நேற்றுமுன்தினம் மக்களவையில் குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு பிரதமர் பதில் அளித்ததை தொடர்ந்து இதற்கான தீர்மானம் நிறைவேறியது.

❖❖❖❖❖❖❖

பரிக்ஷா பே சர்ச்சா

நாடுமுழுவதும் பொதுத்தேர்வு எழுதவிருக்கும் மாணாக்கரிடையே, பிரதமர் திரு. நரேந்திரமோடி 8-வது முறையாக பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வில் வரும் 10-ம் தேதி கலந்துரையாடுகிறார்.

மாணவ மாணவிகள் தேர்வு அழுத்தம் இல்லாமல் தேர்வுகளை இலகுவாக எதிர்கொள்ள பரிக்ஷா பே சர்ச்சா 2025-ன், 8 சிறப்பு தொகுப்புகளை மாணாக்கர் பெற்றோர், ஆசிரியர்கள் பார்வையிட பிரதமர் தமது சமூக வலைதளப்பதிவில் அழைப்பு விடுத்துள்ளார்.

மாணவ மாணவிகளின் தேர்வு அழுத்தத்தை போக்கும் வகையில் ஆண்டுதோறும் தேர்வுகாலங்களில் இந்நிகழ்வில் பிரதமர் உரையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் இக்கலந்துரையாடலில் பங்கேற்பது இதன் சிறப்பம்சமாகும்

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் திருப்பி அனுப்பப்பட்ட விவகாரம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிரொலித்த நிலையில் இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் **S.**ஜெய்சங்கர் இன்று பிற்பகல் 2 மணிக்கு, மாநிலங்களவையில் அறிக்கை வெளியிடுகிறார்.

முன்னதாக மக்களவையில் இப்பிரச்சனையை எழுப்பி எதிர்கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் காங்கிரஸ், சமாஜ்வாடி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் இப்பிரச்சனையை எழுப்பி இதுதொடர்பான விவாதத்தை வலியுறுத்தி கோஷமிட்டன.

முன்னதாக இதுதொடர்பான ஒத்திவைப்பு தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி கொண்டுவந்தது.

இதற்கு பதிலளித்த அவைத்தலைவர் திரு. ஓம்பிர்லா, இது அந்நிய தேசம் தொடர்பான பிரச்சனை என்பதால் அவை சுமூகமாக செயல்பட உறுப்பினர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கோரினார்.

ஆனால் எதிர்கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து குரல் எழுப்பி அமளியில் ஈடுபடவே அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியவுடன் இப்பிரச்சனையில் எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனையை வலியுறுத்தி எதிர்கட்சிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, இவ்விஷயம் தொடர்பாக விவாதத்தை வலியுறுத்தினர்.

அமளியினூடே அவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் நண்பகல் வரை அவையை ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை கூடியபோது அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் இவ்விஷயத்தில் வெளியுறவுத்துறை அமைச்சர் மாநிலங்களவையில் இன்று அறிக்கை தாக்கல் செய்வார் என குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர் – கேள்வி நேரம்

வெளிநாடுகளில் தங்கி படிக்கும் இந்திய மாணவர்களின் நலமும், பாதுகாப்புமே, மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அமைச்சர், வெளிநாடுகளில் குழப்பமான பகுதிகளில் உள்ள இந்திய மாணவர்களை பாதுகாத்து அவர்கள் நாடு திரும்ப உரிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டதை எடுத்துரைத்தார்.

உக்ரைனில் போர் நடைபெற்றபோது அங்குள்ள மருத்துவ மாணவர்கள் வேறு நாடுகளில் மருத்துவத்தை தொடர்வதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப் பட்டதோடு செய்முறை தேர்வுகள் இந்தியாவில் அனுமதிக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இம்மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கும் வகையில் கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகளில் 75 ஆயிரம் கூடுதல் மருத்துவ இடங்கள் ஏற்படுத்தப்பட்டதாக டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

பங்கஜ் சவுத்ரி

டிஜிட்டல் பண பரிவர்த்தனை முறைகேடுகளை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்

மாநிலங்களவையில் எழுத்து பூர்வமாக இன்று அவர் அளித்த பதிலில், இத்தகைய சவால்களை எதிர்கொள்வதற்கான ரிசர்வ் வங்கியின் நெறிமுறைகளை எடுத்துரைத்தார்.

குறுஞ்செய்தி, ஊடகங்கள் வாயிலான பிரச்சாரம் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு உரிய விழிப்புணர்வை ரிசர்வ் வங்கியும் இதர வங்கிகளும் ஏற்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு சார்ந்த கருவிகள் மூலம் முறைகேடுகளை தவிர்க்க, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

தமிழக விவசாயிகள் சங்க நிறுவனர் நாராயணசாமி நாயுடுவின் நூற்றாண்டு பிறந்த தினத்தை ஒட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் அவரை தலைவணங்குவதாக கூறியுள்ளார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த பல்வேறு தியாகங்களை புரிந்த நாராயணசாமி நாயுடுவை போற்றுவதாக தமது சமூகவலைதள பதிவில் தெரித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நெல்லை மாவட்டம் கங்கை கொண்டான் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் தொழில் மைய வளாகத்தில் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சூரிய மின் சக்தி தகடு உற்பத்தி ஆலையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

இதன்மூலம் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வேலை வாய்ப்பை பெறுவர்.

மேலும் 3 ஆயிரத்து 125 கோடி ரூபாய் மதிப்பில் புதிய சூரிய ஒளி தொழிற்சாலைக்கு முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

திருநெல்வேலியில் இன்றுமாலை நடைபெறும் நிகழ்ச்சியில் 75 ஆயிரத்து 151 பயனாளிகளுக்கு 167 கோடி ரூபாய் மதிப்பில் நல திட்ட உதவிகளை அவர் வழங்க உள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் முதலமைச்சர் இன்றும் நாளையும் கள ஆய்வு மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளரும், எதிர்கட்சித் தலைவருமான திரு. எடப்பாடி கே.பழனிச்சாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாணவிகள், பெண்கள் தொடர்ந்து பாலியல் வன்கொடுமைக்கு ஆளாவதாகவும், இது மிகவும் வேதனைக்குரிய விஷயம் என கூறியுள்ளார்.

மாநிலத்தில் மகளிர் பாதுகாப்பு, கேள்விக்குறியாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

❖❖❖❖❖❖❖

வாக்கு எண்ணிக்கை

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் மற்றும் ஈரோடு கிழக்கு, உத்திரபிரதேசம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளைமறுநாள் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

<u>திருவள்ளூர் வாய்ஸ்</u>

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காட்டில் மீன்வளத்துறை சார்பில் கடல்வாழ் ஆமைகளின் இனத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு மீனவர்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>பறவைகள் வாய்ஸ்</u>

நாகை கோடியக்கரை பறவைகள் சரணாலயத்தில் வெளிநாட்டு பறவைகள் வந்து குவிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>முதுமலை வாய்ஸ்</u>

தமிழ்நாட்டில் முதன்முறையாக நீலகிரி முதுமலை புலிகள் காப்பகத்தில் வேட்டை தடுப்பு இரவு சிறப்பு ரோந்துபணியை வனத்துறையினர் மேற்கொண்டுள்ளனர்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

<u>இருவரி</u>

உதகையில் குடிநீர் வழங்கும் பிரதான அணையான பார்சன்ஸ் வேலி அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளதால், கோடை சீசன் முடியும் வரை உதகையில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில் மினி பேருந்து இயக்க அனுமதிபெற, வரும் 12-ம் தேதி முதல் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

நாகை தொழில்பயிற்சி நிலையத்தில் தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் வரும் 10-ம் தேதி நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மணிமுத்தா அணை மதகு சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் அலுவலர்களுடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தேனி மாவட்டம் வைகை அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக இன்றுமுதல் வரும் 15-ம் தேதிவரை வினாடிக்கு 300 கனஅடிவீதம் சிறப்பு நிகழ்வாக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

<u>கோவில்</u>

மதுரை திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் தைபூச தெப்பத்திருவிழாவை முன்னிட்டு திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்வான தெப்பத்திருவிழா நாளை நடைபெறும்.

❖❖❖❖❖❖❖

<u>கிரிக்கெட்</u>

நாக்பூரில் இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து சற்றுமுன் 5 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 26 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக டாஸ் வென்ற இங்கிலாந்து பேட் செய்ய தீர்மானித்தது.

❖❖❖❖❖❖❖

<u>டேபிள் டென்னிஸ்</u>

சிங்கப்பூரில் நடைபெறும் உலக டேபிள் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் மானவ் தாக்கர், மனுஷ் ஷா இணை - பிரான்ஸ் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖